**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.715/2024 நாள்- 10.07.2026

**வா.சா.2. கண்ணன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

வாதி எனக்கு 8 வருடங்களாக பழக்கம். எனக்கு பண உதவி தேவைப்படும் பட்சத்தில் வாதியிடம் கடன் பெறுவேனா என்றால் இல்லை. வாதி யாருக்காவது கடன் கொடுத்து கடனுறுதிசீட்டு எழுதும் போது உதவிக்காக என்னை அழைப்பார் என்றால் சரிதான். இதுவரை வாதி அழைத்ததன் பெயரில் ஒருமுறை மட்டுமே கடனுறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். வாதி பலநபர்களுக்கு கடன் கொடுக்கும் பழக்கம் உண்டு என்றும் நான் பல கடனுறுதிசீட்டுகளில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வேறு நபர்களுக்கு கடன் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் வியாபார ரீதியாக தொடர்பு உண்டா என்று எனக்கு தெரியாது. நான் தற்போது ஐஸ் விற்பனை செய்து வருகிறேன். வாதி தற்போது எந்த வேலைக்கும் செல்லவில்லை வீட்டில் இருக்கிறார். முன்பு வாதி இன்ஜீனியராக அரசு ஊழியராக பணிபுரிந்து வந்தார். வாதி, பிரதிவாதி வீட்டிற்கு என்னை அழைத்து சென்றதில்லை. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டை நான் எழுதினேன். கடனுறுதிசீட்டை அய்யப்பன் தான் வாங்கி வந்தார் நான் எழுதிக் கொடுத்தேன். அய்யப்பனை இதற்கு முன்பு வாதி வீட்டில் வைத்து பார்த்துள்ளேன். புனல்வேலி மெயின்ரோட்டில் வைத்து பார்த்துள்ளேன். வாதியின் வீட்டில் கையொப்பம் செய்வதற்கு முன்பாக அய்யப்பனை நான் பார்த்ததில்லை. கடனுறுதிசீட்டு எழுதுவதற்கு முன்பாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் என்ன கொடுக்கல் வாங்கல் இருந்தது என்று எனக்கு தெரியாது. வாதி கூறியதன் பெயரில் தான் கடனுறுதிசீட்டில் தொகை எழுதினேன். பிரதிவாதி வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு எழுதிய சமயத்தில் பக்கவாத நோயால் வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. கையெழுத்திற்கும், கையொப்பத்திற்கும் எனக்கு வித்தியாசம் தெரியாது. கையொப்பத்திற்கும் கைரேகை வைப்பதற்கும் வித்தியாசம் தெரியும். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்தார் மட்டும் கூறியுள்ளேன் என்றும் கைரேகை வைத்ததாக கூறவில்லை

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே பிரதிவாதி கைரேகையும் கையொப்பமும் ஆவணம் எழுதும் போது வைத்திருந்தால் என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் கைரேகையும் கையொப்பமும் வைத்தார் சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தில் பிரதிவாதியின் கைரேகையும், கையொப்பமும் மோசடியாக இடப்பட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் கூறியது போன்று பிரதிவாதி என் முன்பாக கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்யவில்லை என்றும், என் முன்பாக கடன் கொடுக்கவில்லை என்றும் வாதி எனக்கு நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மனைவியிடம் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியும், பிரதிவாதிக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்று வாதி என்னிடம் கூறவில்லை என்றால் என் முன்பாக ரூ.4 லட்சம் கடன் கொடுத்தார். ரூ.4 லட்சத்திற்கு ரூ.500 தாள்களாக 8 கட்டுக்கள் கொடுத்தார். வாதி மனைவிக்கும் பிரதிவாதிக்கும் என்ன வியாபார தொடர்பு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றும் அதனால் வழக்கில் பிரதிவாதிக்கு ரூ.4 லட்சம் கடன் கொடுத்தாக கூறுவதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் எவ்வாறு பழக்கம் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதியின் மனைவிக்கு சொத்து எதுவும் விற்றுள்ளாரா என்று எனக்கு தெரியாது. வாதியும் என்னிடம் கூறவில்லை. நான் சொன்ன நாளில் பிரதிவாதி வாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றும் கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் நான் அதில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும் வாதிக்கு ஆதரவாக பொய் ஆவணம் புனைந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.